DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.610/2025**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அனுஷாமனோகரி |
| Husband Name | : | நாகராஜ் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது தென்காசி மாவட்டம், ICUAW பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.11.2024ம் தேதி திருமங்கலம் தாலுகா, வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த போது, கூடக்கோவில் காவல்நிலைய குற்ற எண்.144/2024 பிரிவுகள் 25(1A) Arms Act வழக்கினை கைப்பற்றபட்ட சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் சார்பு ஆய்வாளர் **அ.சா.2** கார்த்திகா அவர்கள் விசாரணைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் தலைமை காவலர் 919 அ.சா.1 முருகன், தலைமைகாவலர் 158 சாட்சி எண்.1 ராஜாபிரபு மற்றும் முதல் தகவல் அறிக்கை எதிரி கைது சொத்துகளை கைபற்றியது சம்மந்தமான சார்பு ஆய்வாளர் **அ.சா.2** கார்த்திகா அவர்களையும் விசாரணை செய்து தனி தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் எதிரிகள் 1வது எதிரி அழகுராஜா, 2வது எதிரி அருண் ஆகியோர்களை முறையே நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் சொத்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்து இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து 16.11.2024ம் தேதி இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவ இடமானது நெடுமதுரை மந்தை என்ற இடத்தில் இருந்து சுமார் 5 அல்லது 6 கி.மீ துாரத்தில் உள்ளது. உதவி ஆய்வாளர் ரோந்து பணிக்கு வழக்கம் போல் ரோல் கால் முடித்த பின்பு காலை 09.00 கிளம்பிவிடுவார்கள். ரோந்து பணிக்கு செல்லும் போது என்ன பொருட்கள் எடுத்து செல்கிறார்கள் என்ற விபரத்தை என்னிடம் கூறினார்களா என்றால் இல்லை. ரோந்து பணிக்கு செல்லும் போது எடுத்து செல்லும் பொருட்களை பதிவேட்டில் பதிவு செய்வார்களா என்றால் பதிவு செய்யமாட்டார்கள். ரோந்து பணிக்கு செல்வதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ள விபரத்தை பார்வையிட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. உதவி ஆய்வாளர் அவர்கள் நெடுமதுரை கிராமத்திற்கு எந்த வழியாக சென்றார்கள் என்று கூறினார்களா என்றால் பாரபத்தி வழியாக சென்றதாக கூறினார்கள். நெடுமதுரை கிராமத்தில் பல கடைகளும், வீடுகளும் மற்றும் 1000க்கு மக்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் சாட்சிசயாக இருக்க முன்வராத விபத்தை உதவி ஆய்வாளர் என்னுடைய விசாரணையில் தெரிவித்தார். அவ்வாறு சாட்சியம் அளிக்க முன்வராத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் அவர்களால் லேப்டாப்பில் தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. காவல் உதவி ஆய்வாளர் காவல்நிலையத்தில் உள்ள பிரிண்டரை வெளியில் எடுத்துச்செல்ல என்னிடம் அனுமதி கேட்டாரா என்றால் அவ்வாறு அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி பிரிண்டரை எடுத்து சென்றதற்கு காவல்நிலைய பதிவேடுகளில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. 2வது எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படாததற்கு உதவி ஆய்வாளர் என்னுடைய விசாரணையில் காரணம் எதுவும் தெரிவித்தாரா என்றால், இல்லை. மேற்படி நபர்கள் ரோந்து பணிக்கு ஈடுப்பட்ட சம்மந்தமான ஆவணங்கள் எதையும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், வழக்கு கோப்புகள் அனைத்தும் பின் யோசனையுடன் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு முறையாக புலன்விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:52:48 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.